இலங்கை சமூக பாதுகாப்புச் சபையி - 2024
----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தின மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது. மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசோதனை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கை மீது கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்பட்டிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது.

1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 88 இற்கு இணங்க நிதி நிலைமைக் கூற்று முகப்பில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்களின் கீழ் இருப்பு குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் ஏனைய சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டு முதல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி 49 இற்கு இணங்க சொத்துக்கள் அடங்கும் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் முழு வகுப்பையும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் சபையினால் 2024 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு கிரயமாகிய ரூபா 18,647,000 தொகைக்கான மோட்டார் வாகனங்களின் கிரயம் ரூபா 17,765,000 தொகைக்கான 07 மோட்டார் வாகனங்கள் மாத்திரம் ரூபா 28,850,000 தொகைக்கு மீளாய்வாண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	மீதியான வாகனங்கள் 14 (மோட்டார் சைக்கிள்கள்) 2025 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்து பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என.	கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 4,339,821 தொகைக்கான வங்கி மேலதிகப் பற்று நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கையில் காசு மற்றும் வங்கி மீதியில் காட்டப்பட்டிருந்ததனால் காசு மற்றும் வங்கி மீதி நடைமுறைப் பொறுப்புக்கள் அந்தப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் வங்கி மேலதிகப் பற்று நடைமுறைப் பொறுப்புக்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய சீராக்கல் ரூபா 14,729,764 இற்கான பெறுமதியிற்காக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மேற்கொண்டிருக்காததுடன், அது தொடர்பாக சபையின் தகவல்களின் மூலம் குறிப்பிட்ட பெறுமதியினை இனங்காண முடியாதுள்ளது.	எதிர்காலத்தில் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தலில் தாமதமடையாமல் இருப்பதற்கு தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ) ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்தவரினால் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த தவணைப் பணம் அங்கத்தவர்களின் அடையாளத்தை இனங்கண்டு அந்த தனிப்பட்ட கணக்குகளுக்கு கணக்கீடு செய்வதற்கு பதிலாக இனங் காணப்படாத வைப்புக்கள் என 2004 முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தொகை ரூபா 3,858,800 தொகை முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்களின் கீழ் நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அந்த மீதியில் 2024 ஆண்டிற்குரிய ரூபா 624,877 இற்கான மீதியொன்றும் அடங்கியிருந்தது.	இனங்காணப்படாத வைப்புக்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் சமூக பாதுகாப்பு நிதியக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	அங்கத்தவர்களினால் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள தவணைப் பணம் அங்கத்தவர்களின் அடையாளத்தை இனங்கண்டு அந்த தனிப்பட்ட கணக்குகளுக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 177, 2023 திசெம்பர் 29 திகதிய 05/2023 இலக்கம் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கை மற்றும் திறைசேரிச் செயற்பாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் 2024 ஜூலை 15 திகதிய இலக்கம் TO/CFM/01/06/02(i) கொண்ட கடிதம்	2023 ஆண்டின் திசெம்பர் மாதத்திற்கான சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்காக 2023 நவம்பர் மாதத்தின் உண்மையான செலவை அடிப்படையாகக் கொண்டு ரூபா 8.727 மில்லியன் தொகை விண்ணப்பிப்பதற்கு பதிலாக ரூபா 15.7 மில்லியன் கட்டுநிதி விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதியாக இருக்கும் ரூபா 1.87 மில்லியனிற்கான தொகையை திறைசேரிக்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 1.38 மில்லியன் தொகையொன்று மாத்திரம் 2024 செப்தம்பர் 20 திகதி திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.	2023 ஆண்டின் நவம்பர் ரூபா 15.7 மில்லியனிற்கான கட்டுநிதி விண்ணப்பிக்கப்பட்டது திசெம்பர் மாதத்தின் சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்காக ரூபா 9.84 மில்லியன் மற்றும் கடந்த ஆண்டு செலுத்தப்படாத ரூபா 4 மில்லியன் செலவுக்காக காணப்பட்டதுடன், மீதித் தொகை என ரூபா 1.38 மில்லியன் தொகை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	நிதிப் பிரமாணம், சுற்றறிக்கை மற்றும் உரிய கடிதங்களின் படி மீதியான அனைத்துத் தொகையும் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2019 திசெம்பர் 17 திகதிய பீஈடீ/08/2019 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை	2020 ஆண்டு முதல் மின்பெறுகை செய்முறை கடைபிடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் தேசிய மின் அரச பெறுகை முறைமை மீளாய்வாண்டு இறுதி வரை பதிவு செய்திருக்கவில்லை.	தேசிய ஈ-அரச பெறுகை முறைமைக்கு பதிவு செய்வதற்காக கடந்த ஆண்டின் போது முயற்சி செய்த போதிலும், அந்த நிகழ்வு நிலை மேற்கொள்ள முடியாமல் போனது எனவும் மற்றும் 2025 ஆண்டில் குறிப்பிட்ட நிறுவனத்தின் உதவியுடன் பதிவு செய்யப்படும் எனவும்.	சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும்.
(இ)	1999 இன் 33 ஆம் இலக்க சமூக பாதுகாப்புச் சபை (திருத்திய) சட்டத்தின் பிரிவு 22	சபைக்கு உடனடியாக தேவைப்படாத சபை நிதியத்தில் காணப்படும் அனைத்துப் பணமும் அமைச்சரினால் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் இணக்கத்துடன் அதிகாரம் அளிக்கப்படும் ஏதேனும் முறையொன்றின் கீழ் அவ்வாறு அதிகாரம் அழிக்கப்பட்ட	பணம் முதலீடு செய்வது நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02/2018 இன் படியேயாகும் எனவும், முதலீடுகள் முதிர்வடையும் போது செய்முறை ரீதியாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் மற்றும்	சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும்.

		பிணையங்களில் முதலீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் கூட்டுப்பெறுமதி ரூபா 3,165,578,331 இற்கான முதலீடுகளிற்காக இணங்கியிருக்கவில்லை.	நிதியமைச்சரின் இணக்கத்தை பெற்றுக்கொள்வதில் தாமதமாவதனால் முதலீடு மேற்கொள்ளாமல் செயற்படாத பணத்தை கணக்குகளில் வைத்திருக்க நேரிடுகின்றது. அதன் காரணமாக பாரிய முதலீட்டு வட்டி எண்ணிக்கையொன்று நிறுவனம் இழக்க நேரிடுகின்றது என சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் மற்றும் நிதியமைச்சரின் இணக்கத்தை பெற்றுக்கொள்ளல் செய்முறை ரீதியாக முடியாதுள்ளது என காணப்படவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,802,525 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,575,183 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 8,227,342 இற்கான பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. அந்த பற்றாக்குறைக்கு ஊழியர் சம்பளம் மற்றும் பராமரிப்புச் செலவு அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காமை, முகாமைத்துவத்தினால் இடமாற்றம் செய்தவற்கு நடவடிக்கை எடுக்காமை, சபையின் உள்ளக மாற்றங்கள் மற்றும் கடமை விடயங்களை மாற்றக்கூடிய உத்தியோகத்தர்கள், நீண்ட காலமாக ஒரே கடமை விடயத்தை நிறைவேற்றுதல் போன்ற விடயங்களின் காரணமாக உத்தியோகத்தர் ஒருவரை	சில சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர் பாற்றாக்குறை காரணமாக 04 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் செயற்படுத்த முடியாத சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது என. உத்தியோத்தர்கள் தலைமை அலுவலகத்தில் கடமையாற்ற விருப்பமின்மை மற்றும் நீண்ட காலமாக தலைமை அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள்	இடமாற்றக் கொள்கையின் படி உத்தியோகத்தர்கள் 05 வருடத்திற்கு ஒருமுறை இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

	இடமாற்றம் செய்து பெற்றுக்கொள்ளக்கூடிய எதிர்பார்பான உத்தியோகத்தரின் தொழில்சார் அபிவிருத்தி திறமை மேம்பாடு, அனுபவத்தை பெற்றுக்கொள்ளல், நிறுவனத்தின் செயற்திரண் மற்றும் ஆக்கபூர்வ தன்மையை அபிவிருத்தி செய்தல் உட்பட குறிக்கோள்களை திணைக்களத்திற்கு நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் இருந்தது.	எதிர்காலத்தில் உள்ளக இடமாற்றத்தின் கீழ் உள்ளக விடயங்கள் மாற்றப்படல் மேற்கொள்ளப்படுகின்றது என.	
(ஆ)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 198 மற்றும் உள்ளவாறான பதவியணி 151 ஆக காணப்பட்டதுடன், 09 பதவிகளில் 47 வெற்றிடங்கள் காணப்பட்டது. 03 பதவிகளில் 09 உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டுள்ளது.	அரச கொள்கைக்கு இணங்க அரச நிறுவனங்களில் பதவிகளுக்காக புதிய ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை என.	பதவி வெற்றிடங்களை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுகைத் திட்டத்தின் படி சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு புதிய மென்பொருள் முறைமையொன்று நிறுவுவதற்காக ரூபா 12,511,000 தொகைக்கான ஏற்பாடொன்று திறைசேரியில் இருந்து பெறப்பட்டிருந்ததுடன், அதற்காக உரிய வழங்குனருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 14 திகதி முதலாவது வழங்கல் தொகுதி தொடர்பாக 10 சதவீத கொடுப்பனவு என ரூபா 1,009,250 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 வருட காலம் கடந்திருந்த போதிலும், கணினி முறைமை நிறுவுவதற்கு முடியாமல் இருந்தது. இந்த திறைசேரி ஏற்பாடுகளை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு வருவதுடன், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா	சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முகாமைத்துவ தகவல் முறைமையொன்று தயாரிப்பதற்கு மென்பொருள் வழங்கும் நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு அதன் முதலாவது வழங்கல் தொகுதிக்காக ரூபா 1,009,250 தொகை செலுத்தப்பட்டு அந்த நிறுவனத்துடன் காணப்பட்ட உடன்படிக்கை பூர்த்தி செய்யப்பட்டதெனவும், புதிய பெறுகை செய்முறை ஒன்று ஆரம்பிக்கப்பட்ட போதிலும், பெறுகை வழிகாட்டல் மீறப்பட்டிருந்தமையால் பணிப்பாளர் சபையினர் நிராகரிக்கப்பட்டிருந்தது என.	புதிய மென்பொருள் முறைமையொன்று நிறுவப்பட்டு ஏற்பாடுகளின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	19,187,308 வரை வைப்புத் தொகை அதிகரித்திருந்ததுடன், அதற்காக ரூபா 2,010,525 இற்கான முதலீட்டு வட்டி வருமானம் ஒன்று பெற்றிருந்த போதிலும், ஏற்பாடுகளில் இருந்து எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	சபையினால் 2017 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த கலைஞர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்திற்காக பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு ரூபா 94 மில்லியன் தொகையொன்று வழங்கியிருந்தது. அந்தப் பணத்தை வங்கி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியத்தின் மீதி ரூபா 186.64 மில்லியன் தொகை வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. அதன்படி, கலைஞர்களுக்காக கிடைத்திருந்த பணம் குறிப்பிட்ட கருமத்திற்காக உரிய முறையில் ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாமல் இருந்தது.	கலைஞர்களுக்காக ஓய்வூதியம் ஒன்று வழங்குவதற்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் சமூக பாதுகாப்பு சபையுடன் 2017 ஆண்டின் போது புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றுக்கு இணங்கியிருந்ததெனவும், அதன்படி, புரிந்துணர்வு உடன்படிக்கை 02 ஆவது பிரிவின் படி கலைஞர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் குறிக்கோள் மற்றும் பாதுகாப்பினை நிறைவேற்றிக்கொள்வதற்காக இரு தரப்பினதும் பணிப்பொறுப்பாகும். ஓய்வூதியத் திட்டத்திற்காக அங்கத்துவம் பெற வேண்டிய தனது கலைஞர்களை உடன்படிக்கையின் பிரிவு 2(அ) இன் படி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் தெரிவு செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டும் என.	உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும்.
(இ)	முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்யும் போது மீளாய்வாண்டின் போது அங்கத்துவ ஆட்சேர்ப்பு குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், 1999 இன் 33 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தினால் திருத்தப்பட்ட 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்புச் சபைச் சட்டம் மற்றும் 2006 செப்தம்பர் 25 திகதிய 1464/05 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரமாண இலக்கம் 04 இன் படி நியதிச் சட்ட பிரதான குறிக்கோளாகிய ஓய்வூதியம் பெற்றிருக்காத அல்லது ஓய்வூதியத்துடனான பதவிகள் வகிக்காத அனைத்து		

ஊழியர்களுக்கும் சமூக பாதுகாப்பு மற்றும் ஓய்வூதிய நலன் திட்டத்தை செயற்படுத்துதல் அதன்படி சுயதொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றாமை காரணமாக கீழ் குறிப்பிட்டவாறு செயலாற்றுகை எதிர்பார்த்த மட்டத்தை விட குறைந்த எண்ணிக்கையில் காணப்பட்டது.		
(i) மீளாய்வாண்டு இறுதியளவில் ஓய்வூதிய முறைமைக்கு புதிய பங்களிப்பாளர்கள் சேர்த்துக்கொள்ளும் போது அறவிடப்பட்ட முதலாவது தவணைப் பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 163.29 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், வருடாந்த சேகரிப்பு ரூபா 261.77 மில்லியன் ஆகும். மீளய்வாண்டில் நிதியத்தின் வருமானம் ஆகிய ரூபா 769.55 மில்லியன் தொகை அங்கத்தவர்களின் பங்களிப்புத் தொகையில் மற்றும் முதலீட்டு வட்டி வருமானமும் அடங்கியிருந்ததுடன், பிரதான வருமானமான அங்கத்தவர்களின் பங்களிப்புத் தொகையில் மீளாய்வாண்டின் போது 539 அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் உரித்தாகும் திகதிக்கு முன்னர் மற்றும் ஓய்வூதியம் உரித்தாகும் திகதிக்கு பின்னர் விலகிச் செல்வதன் காரணமாக ரூபா 22.12 மில்லியன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது.	சட்டத்திற்கு இணங்க கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என.	சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும்.
(ii) செயலாற்றுகை அறிக்கையின் படி 2024 திசெம்பர் 31 திகதி வரை ஓய்வூதிய முறைமைக்கு 55964 பங்களிப்பாளர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், 25510 பங்களிப்பாளர்களுக்கு மாத்திரம் உறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. அதாவது 46 சதவீதத்திற்கு மாத்திரம்.	2025 ஆண்டளவில் 04 மாத காலத்தினுள் முழுமையாக உறுதிகள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், எதிர் காலத்தில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உறுதிகளை வழங்குவதற்காக துரிப்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என.	மேலும், வழங்கப்பட வேண்டிய உறுதிகள் 30454 தொகையினை விரைவாக வழங்கப்பட வேண்டும்.

	(iii) தொழில்பயிற்சி நிலையங்களில் இளைஞர் தொகுதிகளின் 400 மாணவர்களுக்காக ரூபா 200,000 தொகை செலவிடப்பட்டு சுயதொழில் / தொழில்முயற்சி இயலுமையை அபிவிருத்தி செய்வதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல் குறிக்கோளாக இருந்த போதிலும், 298 மாணவர்களுக்காக மாத்திரம் நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.	திட்டமிடப்பட்ட 04 நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தி பூர்த்தி செய்யப்பட்டது. அந்த நிகழ்ச்சித் திட்டங்களில் 298 மாணவர்கள் பங்குபற்றியதுடன், அதில் இலக்காகிய மாணவர் எண்ணிக்கையில் 74.5 சதவீதமாகும் எனவும், இதற்காக ரூபா 72,514 தொகை செலவிடப்பட்டுள்ளதுடன், அதில் ஒதுக்கப்பட்ட தொகையில் (ரூபா 200,000) 36.25 சதவீதமாகும் என.	எதிர்பார்த்த நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை நடாத்தப்பட வேண்டும்.
	(iv) செயற்படாத அங்கத்தவர்கள் மீண்டும் செயற்படுத்தும் செயற்திட்டங்களின் மூலம் சுயதொழிலில் ஈடுபடுபவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் குறிக்கோளுடன் 05 செயற்பாடுகளின் கீழ் 2000 அங்கத்தவர்களை செயற்படுத்தி ரூபா 10 மில்லியன் சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், 316 அங்கத்தவர்கள் மாத்திரம் செயற்படுத்திருந்ததுடன், சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 5.47 மில்லியனாகும்.	இணங்குகின்றேன்.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி எதிர்பார்த்த தொழில்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும்.
	(v) முன்னைய ஆண்டுகளின் மூலதன ஏற்பாடுகள் ரூபா 17.03 மில்லியன் செலவிடப்பட்டு புதிய ஓய்வூதிய தகவல் முகாமைத்துவ கணினி முறைமையொன்று நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள போதிலும், வழங்குனர்கள் தெரிவு செய்தல்கள் மற்றும் அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.	அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன்.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி எதிர்பார்த்த தொழில்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும்.
(ஈ)	ஊழியர் கடன் மீதியில் அடங்கியிருந்த இடர் கடன் II இன் கீழ் ரூபா 88,999 இற்கான மீதியொன்று 2008 ஆண்டு முதல் காணப்படுவதுடன், 16 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதனை அறவீடு செய்வதற்கு அல்லது	இடர் கடன் II இன் கீழ் 2008 ஆண்டில் வழங்கியிருந்த கடன் தொகை 2024 பெப்ரவரி முதல் ரூபா 1,625 தவணை வீதம் 2025 மே வரை 15 தவணைகளில் அறவீடு செய்யப்பட்டதெனவும் மற்றும் அதனை தொடர்ந்தும்	நீண்ட கால நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. 2022 ஆண்டு உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கியிருந்த கடன் ரூபா 130,561 தொகை மற்றும் வட்டி என ரூபா 14,623 தொகையில் 2024 ஆண்டில் எதுவித தவணைப் பணமும் அறவீடு செய்திருக்கவில்லை.	இறுதிவரை அறவீடு செய்யப்படவுள்ளது என.